**22LAT303N**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA & BSc DEGREE EXAMINATION MAY 2026**
(Third Semester)

Common to – **BA & BSc PROGRAMMES**

**TAMIL - III**

Time: Three Hours Maximum: 75 Marks

**பகுதி - அ (5 x 1 = 5)**

**ஒரு சொல்/ தொடரில் விடை தருக.**

1. ஆபுத்திரனுக்கு அட்சயப் பாத்திரம் கொடுத்த தெய்வத்தின் பெயர் என்ன?
2. சூளாமணி காப்பியத்தின் ஆசிரியர் யார்?
3. வில்லிப்புத்தூரார் பிறந்த ஊர் எது?
4. கள்வரை நதி மறித்த படலம் இடம்பெற்றுள்ள காண்டம் எது?
5. பாரதாசனின் புரட்சிக்கவி காப்பியம் எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது?

**பகுதி - ஆ (8 x 5 = 40)**

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

6. அ) சேரன் செங்குட்டுவனுக்குக் குன்றக் குறவர்கள் தந்த பரிசுப்பொருட்கள் யாவை?

(அல்லது)

ஆ) ஆபுத்திரன் மணிபல்லவத் தீவை அடைந்ததையும் அட்சயப் பாத்திரத்தை நீத்ததையும் எடுத்துரைக்க.

7. அ) அமைச்சர்களின் மாண்புகளாக அரசன் உரைத்தன யாவை?

(அல்லது)

ஆ) மந்தரை கூறியதைக் கேட்ட கைகேயி சினந்துரைத்தன யாவை?

8. அ) சகாதேவன், கண்ணனைக் கட்டியதையும் வரங்கேட்டதையும் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) கன்னி மரியாளை புனித சூசை புகழ்ந்துரைத்த மொழிகளைப் புலப்படுத்துக.

9. அ) நமிநந்தியடிகள் நீரால் விளக்கெரித்த வரலாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) திருவாரூரில் பிறந்தவர்கள் சிவகணங்களாகத் திகழ்ந்தமையைத் தெளிவுபடுத்துக.

10. அ) முருகப்பெருமான் படைப்புத் தொழில் மேற்கொண்டதை விளக்குக.

(அல்லது)

ஆ) தமிழின் சிறப்புக்களை இராவண காவியம் வழி எடுத்துரைக்க.

11. அ) உழைப்பாளர்களால் நாடடைந்த பயன்களாக உதாரன் உரைத்தன யாவை?

(அல்லது)

ஆ) அரசனுக்கும் தனக்குமான வழக்காக உதாரன் கூறியன யாவை?

12. அ) மரபியல் சுட்டும் ஆண்பால் பெயர்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) மரபியல் சுட்டும் பெண்பால் பெயர்களைக் குறிப்பிடுக.

13. அ) தொல்காப்பியர் குறிப்பிடும் இளமைப் பெயர்களைச் சுட்டுக.

(அல்லது)

ஆ) தொல்காப்பியர் குறிப்பிடும் உயிரினப் பாகுபாட்டை எழுதுக.

**Cont...**

22LAT303N
Cont…

பகுதி - இ (3 x 10 = 30)

**அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.**

14. அ) சரஸ்வதி மஹால் நூலகத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்துக.

(அல்லது)

ஆ) அருவியாடல் அனுபவத்தை எஸ். ராமகிருஷ்ணன் எங்ஙனம் வெளிப்படுத்தியுள்ளார்?

15. அ) வெள்ளையனுக்கும் அவனது மனைவிக்கும் இடையேயான உரையாடலைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) கட்டபொம்மனுக்கும் சாக்ஷன் மேஷர் துரைக்கும் இடையே நடைபெற்ற உரையாடலைக் குறிப்பிடுக.

16. அ) காப்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை எழுதுக.

Z-Z-Z END